# ஐங்குறுநூற்றில் மேலாண்மை

**பி. சந்தனமாரி**

*உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL4-Jan26-MD-127

Subject: Tamil

Received : 02.09.2025
Accepted : 22.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si4.26.Jan127

Copy Right:

This work is licensed under
a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு ஆகும். இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்று ஐந்திணையாகப் பகுக்கப்பட்டு உள்ளன. இந்நிலையில் **'ஐங்குறுநூற்றில் நீர் நில மேலாண்மை'** எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப்பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். மேலாண்மை என்பது மேலாண்மை செய்தல் அல்லது மேலாளுதல் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்குப் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்படும் ஓர் அமைப்பே மேலாண்மை எனப்படும். ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அந்நாட்டில் வசிக்கும் மக்கள் அனைவரும் கடின உழைப்பில் ஈடுபடுதல் வேண்டும். நெல் பயிர்கள் செல்வச் செழிப்பாக அதிகமான விளைச்சல் பெற வேண்டும். பொன் பெருகி வளமை நிறைந்ததாக இருக்க வேண்டும். அவ்வாறு நெல்வளம் பெருகும் நிலையில் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும். வயல்வெளிகளில் அதிகமாக விளைந்து இருக்கும் நெற்கதிர்களின் வளர்ச்சியைப் பார்த்து வறுமையில் வாடக்கூடிய இரவலர்கள் ஒரு சிலர் விளைச்சல் செய்யும் நிர்வாகத்தினரிடம் வந்து பொருள் வேண்டும் என்று நிற்கச் செய்கிறார்கள் அவ்வகையில் ஐங்குறுநூற்றில் உள்ள மருதத் திணையில் பதிவு செய்யப்பெற்றுள்ள நீர் மற்றும் நில மேலாண்மையை நெல் பயிரிடுதல், அதை வறுமையில் வாடக்கூடிய மக்களுக்கு கொடுத்தல், கரும்பு விளைதல், வெள்ளப் பெருக்கு ஏற்படுதுதல் என்பதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.*

***திறவுச்சொல்:*** *ஐங்குறுநூறு, நெல்விளைச்சல், கரும்பு விளைச்சல், வெள்ளப்பெருக்கு.*

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு ஆகும். இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்று ஐந்திணையாகப் பகுக்கப்பட்டு உள்ளன. அந்த ஐந்திணைகளையும் தனித்தனியாக ஒழுங்குமுறைப்படி பற்றி பேசப்படுகின்றன. அதுபோன்று மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் காலப் பெட்டகமாகத் திகழ்கின்றன. அக்கால மக்களின் சமூக, பொருளாதார மற்றும் வாழ்க்கை முறைகளை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மேலாண்மை

மேலாண்மை என்பது மேலாண்மை செய்தல் அல்லது மேலாளுதல் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்குப் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்படும் ஓர் அமைப்பே மேலாண்மை எனப்படும்.

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

**அறிஞர் கருத்து**

“மேலாளர் புரியும் பணியே மேலாண்மை” என லூாயிஸ் ஆலன் என்பவர் கூறினார். “மேலாண்மை என்பது ஒரு கலை. நீ என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து அதனை மிக நல்ல முறையிலும் குறைந்த செலவிலும் செய்து முடிப்பதே மேலாண்மை எனக் கூறுகிறார், எப்.டபபுள்யூடெய்லர்.

**நில மேலாண்மை**

நி மேலாண்மை என்பது விவசாயம்ஈ வனவியல, மனித குடியிருப்புகள் மற்றும் சுற்றுலா போன்ற பல்வேறு தேவைக்காக நில வளங்களைப் பயன்படுத்தப்படும் நிர்வகிக்கும் செயல் முறையாகும்.

**நெல்**

ஒரு நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அந்நாட்டில் வசிக்கும் மக்கள் அனைவரும் கடின உழைப்பில் ஈடுபடுதல் வேண்டும். இப்பொழுது அம்மக்கள் ஓய்வில்லாத முயற்சி எடுக்க வேண்டும். இம்முயற்சியின் வளர்ச்சி நிலையை வேளாண்மை நிர்ணயம் செய்கின்றன என்பதை,

**“வாழி ஆதன், வாழி அவினி**

**நெல் பல பொழிக!பொன் பெரிது சிறக்க”**

**(ஐங்-1.2)**

நெல் பயிர்கள் செல்வச் செழிப்பாக அதிகமான விளைச்சல் பெற வேண்டும். பொன் பெருகி வளமை நிறைந்ததாக இருக்க வேண்டும். அவ்வாறு நெல்வளம் பெருகும் நிலையில் நிலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஓரம்போகியார் வரிகள் மூலம் அறியமுடிகிறது.

**“நெல்லுக் கிறைத்தநீர் வர்க்கால் வழியோடிப்**

**புல்லுக்கு மாங்கே பொசியுமமாம்”**

**(மூதுரை-10.1)**

என்ற ஔவையார் பாடல் மூலம் நெல்லுக்கு ஏற்றற் போல் நீர் இருக்க வேண்டும் என்று விவசாயத்தை பறைசாற்றுகிறது.

**ஈதல்**

வயல்வெளிகளில் அதிகமாக விளைந்து இருக்கும் நெற்கதிர்களின் வளர்ச்சியைப் பார்த்து வறுமையில் வாடக்கூடிய இரவலர்கள் ஒரு சிலர் விளைச்சல் செய்யும் நிர்வாகத்தினரிடம் வந்து பொருள் வேண்டும் என்று நிற்கச் செய்கிறார்கள். இதில் நிலம் வளர்ச்சியடைந்ததன் காரணமாவதே ஆகும். என்பதை,

**“விளைக வயலே! வருக இரவலர்!**

**பல்லிதழ் நிலமொடு நெய்தல் நிகர்க்கும்”**

**(ஐங்-2.2)**

நெற்பயிர்கள் அதிகமாக விளைந்திருக்கும் நிலையில் நம்மிடம் இருக்குமு் பொருட்களை இல்லாத மக்களுக்கு வழங்கவில்லை என்றால் அவர் இருப்பதை விட சாவதே மேல் என்பார் ஆசிரியர்,

**“சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்**

**கலத்துணீர் பெய்திரீஇ யற்று”**

**(குறள்-60)**

**நெல், கரும்பு**

வயலும் வயல் சார்ந்த நிலத்தில் வாழக்கூடிய மக்களை உழவர், உழத்தியர் என்பார்.அந்நிலம் மருத நிலமாகும். மருத நிலத்தில், ஆறுகள், ஏரிகள், குளங்கள் அமைகின்றன. அந்நிலத்தில் வாழும் மக்கள் வேளாண்மைத் தொழிலை செய்யக் கூடியவர் ஆவார்.

மருதநிலத்தில், கரும்புகள முற்றிய நிலையில் வெண்மையான அழகுப் பொருந்தி பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. அந்த மருத நிலத்தில் வயல்வெளியில் அறுவடை செய்யும் காலத்தில்

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

நெற்கதிர்கள் சருகு போன்ற காய்ந்த நிலையிலட இருக்கின்றன. அவ்வகையில் விளைச்சல் ஏற்பட்டு அதன் வளத்தை உயர்த்திக் காட்டும் என்பதை,

**“பூத்த கரும்பின் காய்த்த நெல்லின்**
**கழனி ஊரன் மார்பு**
**பழனம் ஆகற்க என வேட்டேமே”**

**(ஐங்-4)**

வயலில் நிலைத்த நெல்லை செல்வ செழிப்பான நிலைக்கு வளமான இயல்பை இவ்வயல் நிலம் பெற்றிருந்தது என்பதையும் வயல்களில் பயிரிடுலதால் மக்களுக்குத் தேவையான பணத்தினை நிறைவேற்க செய்கிறது என்பதை இப்பாடல் மூலம் காண முடிகிறது.

**“ஆடுவோமே பள்ளு பாடுவோமே”**

உழவர்கள் நினைத்தாற் போல ஆனந்த ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று என்பதை பாரதியார் வரிகள் மூலம் அறியலாம்.

**நீர் மேலாண்மை**

“நீரின்றி அமையாது உலகு” என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் அன்றாடத் தேவைக்கு உண்ண உணவு,உடுத்த ஆடை, இருக்க இருப்பிடம், பருக நீர் என்ற இதுபோன்ற நிலையில் உள்ளான். அவ்வகையில் வயிலில் பாத்திட்டு அதன் வழியாக நீரை வாய்கால் மூலமாக நிலங்களுக்கு நீரைப் பாய்ச்சுகின்றனர். அவ்வாறு நீர் சீரான தன்மையில் பாய்ச்ச செய்து வயல் வெளிகளில் பசுமையான, வளமான விளைச்சலை மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்றன.

**“இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்அரனும் நாட்டிற்கு உறுப்பு”**

**(குறள்-737)**

நீரின் இன்றியமையாமைக் குறித்து வள்ளுவர் புலப்படுத்துகிறார்.

**வெள்ளப் பெருக்கு**

நீரோட்டத்தின் தன்மை அளவுக்கு அதிகமாக அதிகரித்து வரும்பொழுது ஆற்றங்கரையில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். அதுவே வெள்ளப்பெருக்கு எனப்படும்.

மருதநிலத்தில்வாழும் பெண்கள் அடர்ந்த மணற்பரப்பில் மணலைக் கிளரி விளையாடி மகிழ்ந்தனர். அழகான மரக்கிளைகயை பறித்து தழையாடையாக அணிந்து கொண்டு பொய்கையில் நீராடச் சென்றன. அப்பொழுது மருதநிலத் தலைவிக்குப் பெரும் உதவியாக இருந்தது. மருதநிலப் பொய்கையாகும்.

**“மணல் ஆடு மலிர் நிறை விரும்பிய ஒண் தழை**
**புனல் ஆடு மகளிர்க்கு”**

**(ஐங்-15)**

என்கிறது ஐங்குறுநூறு.

அன்றைய காலத்தில் மணற் குவியலில் காணப்பட்ட நீர் வெள்ளமானது இன்று வெறும் மணல் மேடுகளாகவே காட்சியளிக்கிறது. அதோடு நிலமானது பொய்கையாக காட்சியளித்துக் கொண்டிருந்த பொய்கையானது இன்று பொய்த்துப் போய்விட்டது. எனவே இன்றைய காலத்தில் மரக் காடுகளை அழிப்பதையும், மரங்களை வெட்டுவதையும் தவிர்க்க வேண்டும் மரம் வளர்ப்பதை நாம் அனைவரிடமும் எடுத்துக் கூறி அதனைப் பாதுகாக்கச் செய்தல் வேண்டும் என்று கூறுகின்றன.

**முடிவுரை**

சங்க இலக்கியத்தில் ஐங்குறுநூற்றில் உள்ள மருதத் திணையில் பதிவு செய்யப்பெற்றுள்ள நில

Vol. 10 Special Issue 4 January 2026
E-ISSN: 2456-5571

மற்றும் நீர் மேலாண்மையை நெல் பயிரிடுதல், அதை வறுமையில் வாடக்கூடிய மக்களுக்கு கொடுத்தல், கரும்பு விளைதல், வெள்ளப் பெருக்கு ஏற்படுதுதல் என்பதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

1. பார்வை நூல்கள் பரிபாடல்
2. நற்றிணை
3. மூதுரை
4. திருக்குறள்